# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 6,923—1918 ம் ௵ மாசி ௴ 8 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


# Part IV.—நான்காம் பாகம்.

## காணி விற்பனவுகள்.

**No. 1,474, E. P.**—1918 ம் ஆண்டு பங்குனிமாசம் 22 ந் திகதி, வெள்ளிக்கிழமை, பிற்பகல் ஒன்றரை மணிக்கு கீழ் மாகாணத்து அரசாட்சி ஏசன்றவர்கள் மட்டுக்களப்புக் கச்சேரியிலிருந்து இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் முடிக்குரிய காணிகளை குத்தகையில் கொடுக்கிறதற்கு நியமிக்கப்பட்டிருக்கும் ஒழுங்குகளின்படி ஏலத்திற் கூறி குத்தகைக்குக் கொடுப்பார் அல்லது வேறு விதமாகக் கடவைப்படுத்தல் செய்வார்.

பிரதமபட இலக்கம் 5,270. குறிச்சி—பொத்துவில் பாணமைப்பற்று. உரித்தாளி—முடி.

| கண்டத்தின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | விசாலம். ஏ. | ரூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | பிதாவிழுந்தவெளி அல்லது முகத்துவாரக்காடு .. | — .. | வெட்டைப்பூமி (ரேட்டுக்காக விடப்பட்டது) குத்தகைக்கல்ல .. .. | 0 | 0 | 35 |
| 2 | ஷை .. | யெ. பி. ஐர்சன் | நல்ல ரட்டிடத்துக்குரிய காட்டுப்பூமி .. | 2 | 0 | 5 |
| 3 | ஷை .. | — .. | காடு (கடலுக்காகவிடப்பட்டது)குத்தகைக்கல்ல | 2 | 2 | 9 |
| 4 | ஷை .. | — .. | காடு (வழிப்போக்குக்காக விடப்பட்டது) குத்தகைக்கல்ல .. .. | 0 | 0 | 22 |
| 5 | ஷை .. | பொதுக்குத்தகை | நல்ல கட்டிடத்துக்குரிய காட்டுப்பூமி .. | 0 | 3 | 18 |
| 6 | ஷை .. | — .. | புதிதாக வெளியாக்கப்பட்ட பூமி (பைரங்க வேலைப்பகுதிக்காகச் சேமிக்கப்படும்) .. | 0 | 3 | 24 |

### குத்தகைக்கான பொருத்தனைகள்.

1. குத்தகை பத்து வருஷத்துக்குக் கொடுக்கப்படும்.
2. குத்தகைப்பூமியை அரசாட்சி ஏசன்றுத்துரையவர்கள் ஒப்புக்கொள்ளும் படத்தின்படி குடியிருக்கிறதற்கான வீடுகள் கட்டுவதற்குப் பாவிக்கப்பட வேண்டும்.
3. குத்தகைக்கு இனமாகக் கொடுக்கவேண்டிய பணத்தொகையின் தரிப்பு:—2 ம் இலக்கக் கண்டத்துக்கு ரூபா 15; 5 ம் இலக்கக் கண்டத்துக்கு ரூபா 9.
4. வருடமொன்றிற்கு இறுக்கவேண்டிய வாடகைப் பணத்தொகை:—2 ம் இலக்கக் கண்டத்துக்கு ரூபா 4; 5 ம் இலக்க கண்டத்துககு ரூபா 2.
5. குத்தகை முற்றுப் பெறுகாலம் பூமியும் அதிலுள்ள கட்டிடங்களும் முடிக்குரியதாய்விடும். அக்கட்டிடங்களுக்காவது அல்லது அப்பூமியில் செய்யப்பட்ட யாதாமொரு திருத்தங்களுக்காவது நட்ட நிவிர்த்திப்பணங் கொடுக்கப்படமாட்டாது.
6. 1917 ம் ஆண்டின் 16 ம் இலக்கக் காட்டுக் கட்டளைச்சட்டத்தின் 2 ம் அட்டவணையில் சொல்லிய விபரங்களுக்குட்பட்ட மரங்கள் ஏதாவது அப்பூமியிலிருந்தால் காட்டுக் கந்தோர் உத்தியோகஸ்தரால் மதிக்கப்படும் விலையை இறுத்த பின்பே அம்மரங்களைத் தறித்து எடுத்துக்கொள்ளல் வேண்டும்.
7. குத்தகை கொடுப்பவருடைய அல்லது அரசாட்சி ஏசன்றுத்துரை யவர்களுடைய அநுமதியை எழுத்துமூலமாக முன்னதாகக் கேட்டுப் பெற்றுக்கொண்டொழிய குத்தகை ஒப்பத்தை வேறொருவருக்குச் சாட்டுதல்பண்ண அல்லது பராதீனப்படுத்தக்கூடாது.

மேற்சொல்லிய பூமிகளையிட்டு மேலதிகமான பொருத்தனைகளைப்பற்றி கீழ் மாகாணத்து அரசாட்சி ஏசன்றவர்களிடங் கேட்டறிந்துகொள்ளலாம். அப் பூமிகளின் படங்களை நில அளவைக்காரிய அத்தியக்ஷரிடங் கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம்.

கொலோனியல் சக்கிறுத்தார் கந்தோர்,
கொழும்பு, 1918 ம் ௵ மாசி ௴ 6 ந் உ.

ஆர். ஈ. ஸ்றப்ஸ்,
கொலோனியல் சக்கிறுத்தார்.

**No. 2,022, N.C. P.**—1918 ம் ௵ பங்குனி௴ 19 ந் திகதி செவ்வாய்கிழமை பிற்பகல் 1 மணிக்கு தோப்பாவை வாடிவீட்டில் வடமத்திய மாகாணத்து கவறுமேந்து ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித் துண்டுகளை, அரசாட்சியாரால் காணி விற்பனவைப்பற்றி செய்யப்பட்டிருககும் ஒழுங்குகளின் பிரகாரம் ஏலத்திற்கூறி விற்கப்படும் அல்லது தீர்ந்துவிடப்படும் அல்லது வேறுமாதிரியாக விற்கப்படும். 12 காணித்துண்டுகள், வடமத்திய மாகாணத்து தம்பன்கடவைப் பிரிவின் சிங்கள மெதஎகொட பகுதியிலிருக்கின்றது.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம், ஏ. றூ. ப. | தரிப்புவிலை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|
| | பிளான் இலக்கம் 4,818. குறிச்சி—சிங்கள்ப்பற்று மின்னேரியா. உரித்தாளி—அரசாட்சியார். | | | | |
| 1 | பட்டபிற்றிகந்த பாவுல கெலே | எல். ஜி. அப்புகாமி | நெற்பயிர் செய்கைக்கேற்ற காடு | 1 2 15 | 55 |
| 3 | பட்டபிற்றிகந்த பகல கெலே | பி. வஸ்தியான் சில்வா, மின்னேரி சமாதான உத்தியோகத்தர் | காடு | 2 1 36 | 58 |
| 4 | — | — | பெருந்தெருவுக்காக விடப்பட்ட நிலம் | 0 1 3 | —* |
| 6 | கோங்ககாவத்தை | — | கியுள்வாய்க்காலுக்காக விடப்பட்ட நிலம் | 0 1 19 | —* |
| 8 | ஷை | — | ஷை | 0 0 21 | —* |
| 9 | ஒயாவொடவத்தை | எச். எ. றட்னசேன | காடு | 0 2 33 | 50 |
| 10 | ஷை | — | பெருந்தெருவுக்காக விடப்பட்ட நிலம் | 0 2 0 | —* |
| 11 | ஷை | — | மின்னேரி ஒயாவுக்கும் கியூள்வாய்க்காலுக்கும் விடப்பட்ட நிலம் | 0 2 28 | —* |
| | பிளான் இலக்கம் 5,061 குறிச்சி—மெதபற்று தோப்பாவை. உரித்தாளி—அரசாட்சியார். | | | | |
| 1 | கல்லடிதோட்டம் | — | காடு | 0 1 37 | 33 |
| 2 | ஷை | எச், எம். றன்காமி | காடு | 1 3 25 | 33 |
| | பிளான் இலக்கம் 5,089. குறிச்சி—எகொடப்பற்று கோறுப்பொல. உரித்தாளி—அரசாட்சியார். | | | | |
| 1 | பழப்பந்தலமுன்மாரி | எஸ். அறுனகிரி | நெல்வயல் | 3 3 25 | 20 |
| | பிளான் இலக்கம் 5,100. சிங்களப்பற்று, டியுலங்கடவ்ல. உரித்தாளி—அரசாட்சியார். | | | | |
| 1 | வெலபகலகெலே | கே. குடாறுள | காடு | 2 0 10 | 22·50 |

*விற்பனவுக்காகவல்ல.

மேற் சொல்லப்பட்ட பூமிகளைப்பற்றிய வேறு விபரங்கள் வடமத்திய மாகாண ஏசன்றுத்துரை யவர்களிடமிருந்தும், அவைகளைப்பற்றிய பிரதமப்படங்கள் சர்வயர் ஜெனறல்துரை யவர்களிடமிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

கொலோனியல் சக்கிறுத்தார் கந்தோர்,
கொழும்பு, 1918 ம் ௵ மாசி௴ 1 ந் ௳.

ஆர். ஈ. ஸ்றப்ஸ்,
கொலோனியல் சக்கிறுத்தார்.

---

## அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கருங்காலிக்குளம் காவல்காட்டுடன் சேர்த்துக்கொள்ளுதல் என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. 4,997. குறிச்சி—போடன்குளம்.

| துண்டு. | நிலத்தின் பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | போடன்குளம்கட்டுவெல | வயல் | உக்குறுளைகே நயிந்துறுளை | 3 1 22·5 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1918 ம் ௵ பங்குனிமாதம் 1 ந் தேதியிலன்று 12 மணிக்கு வவுனியாவில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

முல்லைத்தீவுக் கச்சேரி,
1918 ம் ௵ தை௴ 31 ந் ௳.

சீ. டபிள்யு. பிக்மோர்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் துறைமுகப் பாதையிலிருந்து "ஓர்" (Orr) மலைக்குப் போகும் பாதைச்சந்திலிருக்கும் அபாயகரமான மூலையைத் திருத்துவதற்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடத்து இலக்கம் 5,269. குறிச்சி—திருக்கோணமலைப் பட்டணம், சுகாதாரசங்க எல்லைக்குள்.

| துண்டு. | காணியின் பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | அட்டைமால் தோட்டம் | வெறும் நிலம் | ச. நடராசபிள்ளை பிரசித்த நொத்தாரிசு | 0 0 1·3 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸ்ரீ-த்துக காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1918 ம் ஸ்ரீ மார்ச்சு மாசம் 9 ந் தேதியிலன்று காலை 10 மணிக்கு திருக்கோணமலையில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

திருக்கோணமலை கச்சேரி,
1918 ம் ஸ்ரீ ஜனவரிமீ 23 ந் உ.

ஜீ. எஸ் உற்மன்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஸ்ரீ-த்து 3 ம் இலக்கச சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் சாம்பல்தீவு றோட்டை அகலப்படுத்தித் திருத்துவதற்காக என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 5,266. குறிச்சி—சாம்பல்த்தீவு.

| துண்டு. | காணியின் பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | கோவில்வழவு .. | தோட்டம் .. | கனம் டேப்பன்சுவாமி; திருக்கோணமலை .. | 0 | 0 | 2·3 |
| 2 | கணக்கர்வளவு .. | தென்னம்தோட்டம் .. | வயிரவிமுருகன் .. | 0 | 0 | 5 |
| 3 | பறங்கித்தறை .. | ஷை .. | ஷை .. | 0 | 0 | 1·3 |
| 6 | ஆண்டார்அடிபுளிஅடி .. | ஷை .. | தாண்டவிகாத்தார் .. | 0 | 0 | 9 |
| 7 | கணக்கர்வழவு .. | ஷை .. | வயிரவிமுருகன் .. | 0 | 0 | 1·8 |
| 9 | காக்கயர்வழவு .. | தோட்டம் .. | அருளப்பர் நல்லையா .. | 0 | 0 | 18·3 |
| 10 | ஆண்டார்அடிபுளிஅடி .. | ஷை .. | பெருமாள்கந்தப்பன் .. | 0 | 0 | 5·5 |
| 11 | முதலிவழவு .. | ஷை .. | வயிரவிமுருகன் .. | 0 | 0 | 10·9 |
| 12 | பத்தர்வழவு .. | ஷை .. | வல்லிபுரம் தம்பையா .. | 0 | 0 | 9 |
| 14 | காக்கையாவழவு .. | ஷை .. | அருளப்பர் பொன்னையா .. | 0 | 0 | 7·5 |
| 15 | நொத்தாரிஸ்தறை .. | ஷை .. | மு. வயிரமுத்து .. | 0 | 0 | 8·2 |
| 16 | சின்னப்பிள்ளைதறை .. | ஷை .. | எஸ். கனகசிங்கம் .. | 0 | 0 | 5 |
| 17 | சந்தியாதறை .. | ஷை .. | வல்லிபுரம் நாகமணி .. | 0 | 0 | 2·8 |
| 18 | நொத்தாரிஸ்தறை .. | ஷை .. | மு. வயிரமுத்து .. | 0 | 0 | 3 |
| 19 | வயித்திதறை .. | ஷை .. | வல்லிபுரம் குளந்தைவேலு .. | 0 | 0 | 4·5 |
| 20 | நொத்தரிஸ்தறை .. | ஷை .. | எஸ். கனகசிங்கம் .. | 0 | 0 | 8·3 |
| 21 | சின்னையன்தறை .. | ஷை .. | வெஸ்லியன்மிசியோன்சபை, திருகோணமலை | 0 | 0 | 11·7 |
| 22 | பத்தர்வழவு .. | ஷை .. | சுப்பிரமணியம் கைம்பெண் காமாட்சி .. | 0 | 0 | 6 |
| 23 | கணபதியார்தறை .. | ஷை .. | வேலாயுதர் காத்திகேசு .. | 0 | 0 | 6·3 |
| 24 | கோணமலைதறை .. | ஷை .. | எஸ். வீ. செல்வத்துறை .. | 0 | 0 | 4·6 |
| 25 | கந்தர்வழவு .. | ஷை .. | நாகப்பர் சித்திரவேலுவும் மறுவும் .. | 0 | 0 | 7·4 |
| 26 | வேலதறை .. | ஷை .. | கணபதிப்பிள்ளை செல்லையா .. | 0 | 0 | 4·9 |
| 27 | ஷை .. | ஷை .. | ஷை .. | 0 | 0 | 9·4 |
| 28 | சைவர்தறை .. | ஷை .. | நாகர் ஆறுமுகம் .. | 0 | 0 | 8·1 |
| 29 | சோமன்தறை .. | ஷை .. | முருகர் கோணமலை .. | 0 | 0 | 12·4 |
| 30 | காட்டுத்துண்டு .. | ஷை .. | கதிராமர் வேலுப்பிள்ளை .. | 0 | 0 | 3·4 |
| 31 | காத்திதறை .. | ஷை .. | முருகர் செல்லப்பா .. | 0 | 0 | 6·7 |
| 32 | கோணமலைதறை .. | ஷை .. | சின்னத்தம்பி வேலுப்பிள்ளை .. | 0 | 0 | 13·1 |
| 33 | கடைவளவு .. | ஷை .. | இழையதம்பி குமாரசுவாமி .. | 0 | 0 | 9·6 |
| 34 | முத்தன்தறை .. | ஷை .. | வேலுப்பிள்ளை முத்து .. | 0 | 0 | 7 |
| 35 | வண்ணாத்திதறை .. | ஷை .. | கந்தர் வேலுப்பிள்ளை .. | 0 | 0 | 2·2 |
| 36 | ஷை .. | ஷை .. | ஷை .. | 0 | 0 | 2·7 |
| 37 | பனிக்குளத்து வழவு .. | ஷை .. | இளையதம்பி குமாரசுவாமியும் மறுவும் .. | 0 | 0 | 5 |
| 38 | வல்லியான்தறை .. | ஷை .. | தை. ஒப்பிலாமணி .. | 0 | 0 | 4 |
| 39 | பனிக்குளத்துவளவு .. | ஷை .. | இளையதம்பி குமாரசுவாமியும் மறுவும் .. | 0 | 0 | 8 |
| 40 | முதலியாதறை .. | ஷை .. | நல்லதம்பி சுவாமிநாதர் .. | 0 | 1 | 5·2 |
| 41 | மணியகாறன்தறை .. | ஷை .. | நமசிவாயம் கனகசபாபதியும் மறுவும் .. | 0 | 0 | 9 |
| 43 | கரச்சி .. | ஷை .. | கதிராமர் சரவணமுத்துவும் மறுவும் .. | 0 | 0 | 15 8 |
| 46 | முதலியாதறை .. | ஷை .. | நல்லதம்பி சுவாமிநாதர் .. | 0 | 0 | 18·8 |
| 47 | கரச்சி .. | ஷை .. | கதிராமர் சரவணமுத்துவும் மறுவும் .. | 0 | 0 | 7·2 |
| 48 | மருதடிவயல் .. | ஷை .. | சரவணமுத்து பொன்னையா .. | 0 | 0 | 1·2 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸ்ரீ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1918 ம் ஸ்ரீ மார்ச்சுமாதம் 9 ந் தேதியிலன்று 10 மணிக்கு திருக்கோணமலையில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

திருக்கோணமலை கச்சேரி,
1918 ம் ஸ்ரீ ஜனவரிமீ 24 ந் உ.

ஜீ. எஸ். உற்மன்,
மேல் மாகாண அரசாட்சி ஏசண்டு.

1876 ம் ஹூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் வாயுடை பெண்பிளைப் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்கு விளையாட்டு இடத்துக்கும் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

*பிரதமபடத்து இலக்கம் 1,090. குறிச்சி—யட்டிகிந்த பஸ்சரகோறளை உன்பென் அருவ. விவரம்—வயற்காணி.*

| துண்டு. | காணியினது பெயர். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|---|
| 2F | மாலியத்தகும்புற .. | டபிள்யு. வீ. டிகிரிகுமாரிகாமி செட்டிபொலை .. | .. 0 1 32 |
| 14C | ஷை .. | சி. பி. பிச்சை வாயுடை .. .. | .. 0 0 20 |
| 14D | ஷை .. | எல். ஏ. அவுசகாமி கனேகொடை .. | .. 0 0 4 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1918 ம் ஹூ அப்றேல் மாசம் 15 ந் தேதியிலன்று மாலை 1 மணிக்கு வாயுடை றெஸ்ட் அவுசில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

குருநாக்கல் கச்சேரி,
1918 ஹூ தைமீ 31 ந் உ.

பெற்றிராம் ஹில்,
வடமேல் மாகாணம் அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஹூ-த்து 3 ம இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கிழக்கு மாகாணத்து எல்லைக்கு வதுளையில் யிருந்து போகும் றோட்டின் தென்பாதை என்னும் இடத்தில் பீ. டபிள்யு. டீ. கந்தோரின் கூலிஆட்களுக்கு லையின் கட்டுவதற்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

*பிரதமபடத்து இலக்கம் 1,980. குறிச்சி—யற்றிக்கின்றபிரிவின் பசறகோறளையில் உள்ள உல்பென் அருவ.*

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | கொஸ்வத்த அல்லது டெபெதேகர்ப்பு | கொல்லன் கம்மாளையும் இடமும் தோட்டமும் உள்ள இடம் | பீட. பிள்யு. டீ. கூலி நகவில்ல எஸ்ரேற் கொம் பனியார் | 0 1 7·5 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹூ-த்துக காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1918 ம் ஹூ பங்குனிமாதம் 5 ந் தேதியிலன்று பின்பகல் 1 மணிக்கு வதுளைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

வதுளைக் கச்சேரி,
1918 ம் ஹூ தைமீ 29 ந் உ.

எவ். ஆர். பாற்லற்,
ஊவா அரசாட்சி ஏசண்டு.

---

## உரிமைபெறும் பாழ்நிலத்தின் முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

[அறிவித்தல் இல. 6,765, குருநாக்கல்.]

இதன்பின் சொல்லப்படும் காணியில் எவ்வித உடந்தையாயினும் தங்களுக்குண்டெனை உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால, அவர்கள் 1918 ம் ஹூ (பெவுறுவரி) மாசிமீ 8 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாழ்நிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் என். எ. கம்றன் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்துமூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு உரித்துப்பேசப்படாததாகிய சொல்லிய காணியை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

என். எ. கம்றன்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணியின் விவரம்.

வடமேல் மாகாணம் குருநாக்கல் டிஸ்திறிக் உவாயுடவிலி கற்பத்தைச்சேர்ந்த கன்னுவ கோறளையில் இரிமின்ன என்னும் கிராமத்திலுள்ள இத்துட னிணைக்கப்படும் படப்பிரதியில்* விவரித்தபடியே 2 ஏக்கர் 33 பேட்சு விசாலமுடையதும் 1,529 ம் பிரதமபடத்தில் 92 ம் காணித்துண்டாய்க் காட்டப்பட்டதும் சாமானியமாய் றோட்டுகள் என்னும் பெயரினால் அழைக்கப்பட்டு அல்லது அறியப்பட்டு வருவதுமான காணி. இதற் கெல்லைகளாவன: வடக்கு-கனுகமுவ கிராம எல்லை, பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட போறபொலமுக்கலான, முடியால் விற்கப்பட்ட கொறக்ககாமுலகேன, (305,571 ம் உ. ப. ல் காணும் காணி) றத்னயக்க முதியான்செலாக்கே உக்குபண்டாவும் இன்னொருவரும் உரித்தாடும் கொறக்ககாமுலதெனிய, கொனுகலகெதிர கிரிகத்தனவும் இன்னொருவரும் உரித்தாடும் கொறக்ககாமுலவத்த, பல்லேகெதிர உக்குமெனிக்காவும் மறுபேரும் உரித்தாடும் பல்லேகெதிரவத்த, கிராமத்தாருக்குரிய உன்டியாக்கேவத்துயாய, முடியால் விற்கப்பட்ட திப்பொட்டுவகேன, (310,638 ம் உ. ப. ல் காணும் காணி) முடியால் விற்கப்பட்ட வாகொல்லவத்த (304.868 ம் உ. ப. ல் காணும் காணி) முடியால் விற்கப்பட்ட கப்புகாமுலகேன, (304,868 ம் உ. ப. ல் காணும் காணி) முடியால் விற்கப்பட்ட முனகொட்டுவகேன, முடியால் விற்கப்பட்ட துத்திரிபிற்றியகேன அல்லது காஅட்டகாமுலகேன, (305,391 ம் உ. ப. ல் காணும் காணி) றத்னயக்க முதியான்செலாகே புஞ்சிறாளையும் மறுபேரும் உரித்தாடும் துத்திரிபிற்றியவத்த, றத்னயக்க முதியான்செலாக்கே புஞ்சிமெனிக்காவும் இன்னொருவரும் உரித்தாடும் துத்திரிபிற்றியவத்த, முடியால் விற்கப்பட்ட வறகொல்லேகேன அல்லது கொஸ்காமுலகேன, (305,392 ம் உ. ப. ல் கா

*இங்கிலீசின் மூன்றாம் பாகம் 199 ம் பக்கத்தின் படங்களைப் பார்க்குக.

ணும் காணி) முடியால் விற்கப்பட்ட குறுனளேகெலாக்கேகேன (306,058 ம் உ. ப. ல் காணும் காணி), முடியால் விற்கப்பட்ட கலஒட்டுவவத்த (305,447 ம் உ. ப. ல் காணும் காணி), விக்கிரம முதியான்செலாக்கே டிங்கிரிகாமி கோருளே உரித்தாடும் பல்லேக்கேவத்த, முடியால் விற்கப்பட்ட லீயனகொல்லேகேன, (306,815 ம் உ. ப. ல். காணும் காணி), கனுகமுவ கிராம எல்லை; கிழக்கு-முடியால் விற்கப்பட்ட லீயனகொல்லேகேன, (306,815 ம் உ. ப. ல் காணும் காணி), விக்கிரம முதியான்செலாக்கே டிங்கிரிகாமி கோருளே உரித்தாடும் பல்லெக்கேவத்த, செனவிறத்ன முதியான்செலாகே அப்புகாமியும் மறுபேரும் உரித்தாடும் கோன்காமுலதேனியகும்புறுயாய, பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின்படி முடிககுரியதென தீர்க்கப்பட்ட கன்சபாவ பாதை, செனவறத்ன முதியான்செலாகே அப்புகாமியும் மறுபேரும் உரித்தாடும் கோன்காமுலதெனியகும்புறுயாய, முடியால் விற்கப்பட்ட வறகொல்லயேன, அல்லது கொஸ்காமுலயேன, (305,392 ம் உ. ப. ல் காணும் காணி), விக்கிரம முதியான்செலாக்கே டிங்கிரிகாமி கோருளேயும்மறுபேரும் உரித்தாடும் அஸ்வெதுமயாய; கிராமத்தாருக்குரிய வெட்டுவாய்க்கால்; தெற்கு-விக்கிரம முதியான்செலாக்கே டிங்கிரிகாமி கோருளேயும் மறுபேரும் உரித்தாடும் அஸ்வெதுமகேன்யாய, முடியால் விற்கப்பட்ட வறகொல்லேயேன அல்லது கொஸ்காமுலயேன (305,392 ம் உ. ப. ல் காணும் காணி), றத்ணுயக்கமுதியான்செலாக்கே புஞ்சிமெனிக்காவுக்கும் இன்னொருவருக்கும்சேர்ந்த பத்தக்கேவத்த, கேறத்முதியான்செலாக்கே புஞ்சிருளேயும் மறுபேரும் உரித்தாடும் துத்திரிவிற்றியவத்த, முடியால் விற்கப்பட்ட துத்திரிபிற்றியயேன அல்லது காஅட்டகாமுலயேன (305,391 ம் உ. ப. ல் காணும் காணி), முடியால் விற்கப்பட்ட முனகொட்டுவேகேன (306,114 ம் உ. ப. ல் காணும் காணி), முடியால் விற்கப்பட்ட பல்லெக்கேவத்த (306,045 ம் உ. ப. ல் காணும் காணி), விக்கிரம முதியான்செலாகே டிங்கிரிகாமி கோருளேயும் (பராமரிப்புகாறன்) உரித்தாடும் பான்சலவத்த; முடியால்விற்கப்பட்ட திப்பொட்டுலயேன (310,638 ம் உ. ப. ல் காணும் காணி), மத்தலகேனயலாக்கே கிரி உக்குவா உரித்தாடும் கிற்றினவத்த, கிராமத்தாருக்குரிய உண்டியாக்கேவத்துயாய, உன்டியருலகெதிர முதுமெனிக்காவும் மறுபேரும் உரித்தாடும் உண்டியலாக்கேவத்த, அத்தப்பற்று முதியான்செலாக்கே புஞ்சிருளேயும் மறுபேரும் உரித்தாடும் பகாலகெதிரவத்த, கெறத் முதியான்செலாக்கே உக்குமெனிக்கா உரித்தாடும் கிரிக்கேவத்ததெனிய, பல்லகெதிர உக்குமெனிக்காவும் மறுபேரும் உரித்தாடும் பல்லேவத்த அல்லது எக்கொடவத்த, விக்கிரம முதியான்செலாக்கே டிங்கிரிகாமியும் மறுபேரும் உரித்தாடும் பள்ளக்கேவத்த, கேறத்முதியான்செலாக்கே டிங்கிரிபண்டாவும் இன்னொருவரும் உரித்தாடும் பல்லேகும்புறஆரம்ப, ஓர் எல (நீரோட்டம்) (கிராமத்தாருக்குரிய) அத்தபத்து முதியான்செலாக்கே புஞ்சிருளேயும் மறுபேரும் உரித்தாடும் உடஅரம்ப, முடியால் விற்கப்பட்ட உல்பொத்தேயேன (306,421 ம் உ. ப. ல் காணும் காணி) முடியால் விற்கப்பட்ட கெதிரயேன அல்லது மதுகாமுலயேன, (306,132 ம் உ.ப. ல் காணும் காணி) முடியால் விற்கப்பட்ட கெதிரயேன அல்லது பன்னக்கேயேன, (305,566 ம் உ. ப. ல் காணும் காணி) முடியால் விற்கப்பட்ட குடுகலயேன, (305,566 ம் உ. ப. ல் காணும் காணி) முடியால் விற்கப்பட்ட மீகாமுலதெனியயேன, (306,039 ம் உ. ப. ல் காணும் காணி) முடியால் விற்கப்பட்ட உல்பொத்தயேன, (305,574 ம் உ. ப. ல் காணும் காணி) முடியால் விற்கப்பட்ட கொருலகேயேன, (302,319 ம் உ. ப. ல் காணும் காணி) ஓர் பாதை (கிராமத்தாருக்குரியது); மேற்கு-முடியால் விற்கப்பட்ட மீகாமுலயேன, (306,039 ம் உ. ப. ல் காணும் காணி) முடியால் விற்கப்பட்ட குன்கன்பொலபில்லாவயேன, (306,000 ம் உ. ப. ல் காணும் காணி) முடியால் விற்கப்பட்ட குன்கன்பொலபில்லாவயேன, (305,800 ம் உ. ப. ல் காணும் காணி) முடியால் விற்கப்பட்ட கெதிரயேன (306,039 ம் உ. ப. ல் காணும் காணி) பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதெ தீர்க்கப்பட்ட எல (நீரோட்டம்) கிசாமத்தாருக்குரிய குன்கன்பொலகும்புறுயாய, முடியால் விற்கப்பட்ட குன்கனபொலகும்புறுயாய (306,042 ம் உ. ப. ல் காணும் காணி) பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதென தீர்க்கப்பட் வறவத்தேமுக்கலான அல்லது நாகொலவமுக்கலான உடஇன்குறுவத்த கிராம எல்லை, பாழ்நில கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதென தீர்க்கப்பட்ட வறவத்தமுக்கலான் அல்லது நாகொல்ல முக்கலான, முடியால் விற்கப்பட்ட கனுவகும்புறகாவகேன, (306,039 ம் உ. ப. ல் காணும் காணி) கிராமத்தாருக்குரிய குன்கன்பொலகும்புறுயாய, பாழ்நில கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதென தீர்க்கப்பட்ட எல (நீரோட்டம்) முடியால் விற்கப்பட்ட கெதிரகேன, (306,039 ம் உ. ப. ல் காணும் காணி) முடியால் விற்கப்பட்ட தொட்டபொல பில்லாவ, (305,255 ம் உ. ப. ல் காணும் காணி) முடியால் விற்கப்பட்ட கெதிரகேன அல்லது பன்னக்கேன (305,566 ம் உ. ப. ல் காணும் காணி) முடியால் விற்கப்பட்ட கெதிரகேன அல்லது மதுகாமுலகேன (306,132 ம் உ. ப. ல் காணும் காணி) முடியால் விற்கப்பட்ட தொட்டபொலகேன (305,801 ம் உ. ப. ல் காணும் காணி) எக்கனுயக்க முதியான்செலாக்கே கிரிபண்டாவும் மறுபேரும் உரித்தாடும் பல்லேகும்புறுயாய, பாழ்நில கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதென தீர்க்கப்பட்ட எல (நீரோட்டம்) எக்கனுயக்க முதியான்செலாக்கெ கிரிபண்டாவும் மறுபேரும் உரித்தாடும் பல்லெகும்புறுயாய, அத்தபத்து முதியான்செலாக்கெ புஞ்சிருளேயும் மறுபேரும் உரித்தாடும் பகாலகெதிரவத்த, கிராமத்தாருக்குரிய கிரிகாமிக்கெவத்த, றத்ணுயக்க முதியான்செலாக்கெ அப்புகாமியும் இன்னொருவம் உரித்தாடும் பல்லெகும்புறபில்லாவ, முடியால் விற்கப்பட்ட கொறக்ககாமுலதெனியகேன, றத்ணுயக்க முதியான்செலாக்கெ உக்குபண்டாவும் இன்னொருவரும் உரித்தாடும் கொறக்ககாமுலதெனிய, முடியால் விற்கப்பட்ட கொறக்ககாமுலதெனியகேன (305,804 ம் உ. ப. ல் காணும் காணி).

[குருநாக்கல் வி. உ. 13—1918.]

---

## 1912 ம ஆண்டின் 8 ம் இலக்கச்சட்டத்தின்கீழ் அறிவித்தல்.

*பிறதேசத்துக் குடிவகை, சாராயம் அல்லது கள்ளு விற்குந் தவறணைகளை ஸ்தாபித்தல் அல்லது நீக்குதலைப்பற்றிய அறிவித்தல்.*

இதனடியிற் காணும் அட்டவணையிற் குறிக்கப்பட்டிருக்கும் பிறதேசக் குடிவகை சாராயம், கள்ளு தவறணைகளை 1918 ம் ஸு ஐப்பசிமீ 1 ந் திகதி தொடக்கம் ஸ்தாபிக்க நீக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறதென இத்தா லறிவிக்கப்படுகிறது.

2. இந்தத் தவறணைகள் ஸ்தாபித்த நீக்குதலைப்பற்றி 1918 ம் ஸு பங்குனிமீ 16 ந் திகதி வரைக்கும் எழுத்து மூலத்தில் யாதாயினும் விண்ணப்பத்தை நான் ஏற்றுக்கொள்ளுவேன். மேலும், அத்திகதியில் இறட்டினப்புரி கச்சேரியில் 1 மணிக்கும் 2 மணிக்குமிடையில் எனக்குச் செய்யும் யாதாயினும் வாக்குமூல விண்ணப்பத்தையும் நான் ஏற்றுக்கொள்வேன்.

இறட்டினப்புரி கச்சேரி,
1918 ம் ஸு தைமீ 29 ந உ.

பி. கொன்ஸ்டன்டயின்,
அரசாட்சி ஏஜன்று.

### அட்டவணை.

#### துறக்கப்படும்.

இறட்டினப்புரி நெடுந்தெருவில், பியர், போடர், சாப்பு ஒன்று வைக்க.

#### பூட்டப்படும்.

1. வழுங்கொடை, பீ. ஐ. சில்வா, கொம்பனியார்க்குடைய சில்லறயாய் விற்கும் சாப்பு.
2. இறட்டினப்புரியில், பி. டப்லியு. டயஸ் கொம்பனியார்க்குடைய றிப்ற்சமென்ட் ரூம்.
3. இறட்டினப்புரியில், ஸீ. ஸில்வா கோமஸ்குடையது.
4. இறட்டினப்புரியில், ஜீ. ஏ. சில்வாக்குடைய றிச்மென்ட் ஹோடல்.
5. கந்தவத்தயில் அறக் தவரனை.
6. பொல்தும்போ, கல்லுதவரனை.
7. அடவலையில் ஷை
8. உறஉனவலே ஷை
9. மாதொளை ஷை
10. மஸ்ஸன்னை ஷை
11. கவறகிரிய ஷை

## பிறதேசத்துக் குடிவகை, சாராயம், அல்லது கள்ளு விற்குந் தவறணைகளை ஸ்தாபித்தல் அல்லது நீக்குதலைப்பற்றிய அறிவித்தல்.

இதனடியிற் காணும் அட்டவணையிற் குறிக்கப்பட்டிருக்கும் சாராயம் தவறணையை 1918 ம் ௵ அற்பசி௴ 1 ந் திகதி தொடக்கம் நீக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறதென் இத்தா லறிவிக்கபபடுகிறது.

2. இந்தத் தவறணையை நீக்குதலைப்பற்றி 1918 ம் ௵ பங்குனி௴ 22 ந் திகதி வரைக்கும் எழுத்து மூலத்தில் யாதாயினும் விண்ணப்பத்தை நான் ஏற்றுக்கொள்ளுவேன். மேலும், அத்திகதியில் நுவரெலியாக் கச்சேரியில் காலை 10 மணிக்கும் மாலை 4 மணிக்குமிடையில் எனக்குச்செய்யும் யாதாயினும் வாக்குமூல விண்ணப்பத்தையும் நான் ஏற்றுக் கொள்வேன்.

நுவரெலிக் கச்சேரி,
1918 ம் ௵ மாசி௴ 1 ந் ௳.

எம். எம். வெடர்பேர்ன்,
உதவி அரசாட்சி ஏஜன்று.

அட்டவணை.

நுவரெலியா டிஸ்திறிக் 57 ம் இலக்கம், கரகஸ்தலாவை.

---

## கேள்விப்பத்திரங்களைப்பற்றிய அறிவித்தல்.

புத்தளம் வட உப்புமாலிலேயுள்ள உப்பு உத்தியோகத்தரின் வீடுகளைப் பழுதுபார்க்கும் வேலை ஒப்பந்தத்திற் கொடுக்கப்படும்.

2. இவ்வொப்பந்தத்தைக் கேட்க விரும்புபவர் தமது கேள்விப்பத்திரத்யை யோர் முத்திரித்த வுறையிலிட்டு அதன் இடது மூலையில் "புத்தளம் வட உப்பு மாலினுள்ள உத்தியோகத்தரின் வீடுகளைப் பழுதுபார்க்கும் ஒப்பந்தக் கேள்வி யென்றெழுதிப் புத்தள முதவி யேசண்டவர்கட்கு மாசிமாதம் 18 ந் திகதி பிற்பகல் ஒரு மணிக்கு முந்திக் கிடைக்கத்தக்கதாக வனுப்பவேண்டும்.

3. கேள்விப்பத்திரத்தை யனுப்பமுந்திக் கேள்விக்காரன் எந்தக கச்சேரியிலாவது ஒரு கச்சேரியில் முற்பணமாகப் பத்து ரூபாய் கட்டிப் பெற்றுக்கொண்ட பற்றிச்சீட்டைக் கேள்விப்பத்திரத்தோ டிணைக்கவேண்டும்.

4. கேள்விக்காறன் தனது கேள்வி யேற்றுக்கொள்ளப் படுங் காலத்தில் தான் வேலையைக் கிரமமாக முடித்துப்போடுவதாக கேள்வி யேற்றுக்கொள்ளப்பட்டபின் ஞாயமான காலத்துள் ஓர் உடன்படிக்கை பண்ணிக்கொள்ளாவிட்டால் கட்டிய முற்பணம் பறிமுதலாக்கப்படும்.

5. கேள்விக்காறன் தனக்குக் காயிதங்கள் கிடைக்கத்தக்கதாகப் புத்தளத்திலோா விலாசத்தைக் குறிக்கவேண்டும்.

6. உடன்படிக்கை பண்ணிக்கொண்டபின் நாலு கிழமைக்குள் வேலையை முடித்துப்போடவேண்டும்.

7. இன்னும் வேண்டிய விபரங்களைப் புத்தள முப்புத்துரையவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

### செய்யவேண்டிய வேலையின் விபரம்.
### பொது விபரங்கள்.

தற்போது வீடுகளில் உள்ள உழுத்தும் பழுதாயும்போன மரந்தடி ஓடு முதலியனவற்றை யெடுத்துப்போட்டுப் புது மரந்தடி ஓடுகளைப் போடவேண்டும்.

ஓடுகிளால் வேய்ந்த வீடு வெளிவீடுகளெல்லாவற்றையும் புதுக் ஓடுகிளால் வேய்ந்து மேலே பாரமாகப் பூட்டுகளை வைக்கவேண்டும்.

மண் போட்டிருக்கும் வீடுகளின் உள் நிலத்திற்குப் புதுக்க மண்போட்டுயர்த்தி இறுக்கி மட்டமாக்கி சாணத்தால் மெழுகவேண்டும்.

வேண்டிய இடங்களில் சிவர்கள் செத்தைகளெல்லாவற்றையும் பழுதுபார்க்கவேண்டும்.

வீட்டு வேலிகளெல்லாவற்றையும் பிடுங்கி புதுக் கதியால் நட்டடைக்கவேண்டும்.

### சில்லறையாகப் பார்க்கவேண்டிய பழுதுகள்.

உப்புச் சிறுப்பருடைய வீட்டில் குசினியின் முன் சிவர்களுக்கு மண்பூசவேண்டும், மலசலங் கழிக்கு மிடத்தைப் பழுதுபார்க்கவேண்டும். வீட்டுக்கும் குசினிக்குமிடையில் 17 அடி நீளமும் 7 அடி அகலமுமாய்ப்போக்குவரவு செய்வதற்கான வோர் தலைவாசலைக் கட்டிக் ஓடுகிளால் வேயவேண்டும். வீட்டில் இடிந்து அல்லது வேறு விதமாய்ப் பழுதுபட்டிருக்குஞ் சிவர்களுக்குப் பழுதுபார்த்து வெள்ளையடிக்க வேண்டும்.

இரண்டாவதுடைய வீட்டில் வேண்டிய இடங்களுக்கு செங்கல்லுஞ் சாந்தும் போட்டுப் பழுதுபார்க்க வேண்டும். குசினியின் முன் சிவர்களுக்கு மண் பூசவேண்டும். வெளிப் வெளிப்பக்கத்தைக் ஓடுகிளால் அடைக்க வேண்டும்.

விறுந்தையில் ஓர் பக்கக் கப்பையுந் தீராந்தியையு மெடுத்துப்போட்டுப் புதுக் கப்புந் தீராந்தியும் போடவேண்டும்.

கங்காணியுடைய வீட்டு விறுந்தையில் இரண்டு பக்கத் தீராந்தி போடவேண்டும்.

காவற்காறன் றவ்வதீனுடைய வீட்டில் கதவுகளுக்கும் யன்னல்களுக்குஞ் சிவத்த மை பூசவேண்டும். யன்னலுக் கோர் கொழுக்கி போடவேண்டும். ஓர் பக்கத்திராந்தியை யெடுத்துப்போட்டுப் புதுத் தீராந்தி யொன்று போடவேண்டும்.

காவற்காறன் டேனுடைய வீட்டில் ஓர் மூலைக்கையும், குறுக்குவளையும் பக்கக்கப்பும், பக்கவளையும் புதிதாகப் போட வேண்டும்.

காவற்காறன் இச்சினுடைய வீட்டில் ஓர் பக்கக் கப்பைப் புதிதாய்ப் போடவேண்டும்.

காவற்காறன் தயூர் உடைய வீட்டு விறுந்தையில் ஓர் பக்கத் திராந்தி வைக்கவேண்டும். கதவுகள் நிலைகளுக்கும் யன்னலுக்குஞ் சிகப்பு மை பூச வேண்டும்.

காவறகாறன் மிகேலுடைய வீட்டில் ஒரு மூலைக் கையும் இரண்டு பக்கக் கப்பும் இரண்டு பக்கத் தீராந்தியும் போட வேண்டும். அத்துடன் கதவு யன்னல் நிலை இவைகளுக்குச் சிகப்பு மை பூசவேண்டும். யன்னலையும் பழுதுபார்க்க வேண்டும்.

எஸ். எம். பி. வேந்தர்கோன்,
உதவி யேசண்டருக்காக.

புத்தளங் கச்சேரி,
1918 ம் ஆண்டு தை௴ 31 ந் ௳.

---

## சுப்பிரீங்கோட்டு அறிவித்தல்.

இலங்கைத்தீவிற் சங்கைபோர்ந்த சுப்பிறீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது: இரத்தினபுரி நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிறீங் கோட்டாரால் இரத்தினபுரி டிஸ்திறிக்டைச்சேர்ந்த கிறிமினெல் வழக்குவிசாரணை, 1918 ம் ஆண்டு மாசிமாதம் 22 ந் திகதியாகிய வெள்ளிக் கிழமை காலமே 11 மணிதொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.

ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்க ளெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக்கடவர்கள்.

இரத்தினபுரி பிஸ்கால் கந்தோர்,
1918 ம் ௵ தை௴ 30 ந் ௳.

பி. கொன்ஸ்றன்ரைன்,
பிஸ்கால்.

---

H C COTTLE, GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.